Kanton Zürich
Bildungsdirektion
**Volksschulamt**
Abteilung Pädagogisches
Sektor Unterrichtsfragen

Kontakt: Dr. Ueli Felder, Wissenschaftlicher Mitarbeiter, Walchestrasse 21, 8090 Zürich, Telefon 043 259 22 92, ueli.felder@vsa.zh.ch

November 2021


# மதங்கள், கலாச்சாரங்கள், நெறிமுறைகள்: பெற்றோரிற்கான தகவல்கள்

## வெவ்வேறு மதங்கள் மற்றும் கலாச்சாரங்கள் சார்ந்த மக்களுடன் சேர்ந்து வாழுதல்

சிறுவர்கள் மற்றும் இளம்பருவத்தினர் வெவ்வேறு நாடு, மதம் மற்றும் உலககண்ணோட்டம் உள்ள மக்களை நாளாந்தம் சந்திக்கின்றனர். எமது சமுதாயத்தில் பன்முகத்தன்மை ஒரு முக்கிய அம்சமாகும். நம்பிக்கையும் அவற்றின் பெறுமதி பற்றியபார்வையும் அவற்றை வினாவ தூண்டுகின்றன. „மதங்கள், கலாச்சாரங்கள், நெறிமுறைகள்“ என்ற பாடம் இவ்வாறான வினாக்களிற்கும் அவற்றின் ஒற்றுமைகள் வேற்றுமைகளையும் கண்டறிய உதவுகின்றது..

### மதங்களும் கலாச்சாரங்களும்

ஏன் எதற்காக மக்கள் விழாக்களை கொண்டாடுகின்றார்கள்? அன்றாட வாழ்வை எப்படி அமைக்கின்றார்கள்? எந்த கருத்துக்கள் அவர்களிற்கு முக்கியம்? அவர்கள் எந்த விதிமுறைகளை அவதானிக்கின்றார்கள்? எவ்வாறு சமய பாரம்பரியங்கள் கலாச்சாரங்களை வடிவமைக்கின்றது. இது போன்ற வினாக்கள் சிறுவர் மற்றும் இளம் பருவத்தினருடன் கையாளப்பட வேண்டியவை. இவை வளர்ந்துவரும் சந்ததியினர்க்கு அவர்கள் வாழும் உலகைப்பற்றி விளங்கிக்கொள்ள உதவுவதுடன் வெவ்வேறு மத கலாச்சார கருத்தியல் கொள்கையுள்ள மக்களை மதிப்பதற்கும் வழிவகுக்கும்.

### நெறிமுறைகளும் தத்துவங்களும்

பயம், பாதுகாப்பு, வெற்றி, தோல்லி, பிறப்பு, நோய் மற்றும் இறப்பு போன்ற மனிதனின் அடிப்படை அனுபவங்களைப்பற்றி சிந்தித்துப்பார்க்கையில் வளர்ந்துவரும் சந்ததியினரால் நீதி, சுதந்திரம், பொறுப்பு மற்றும் மனிதப்பண்பாடு போன்ற பெறுமதிமிக்க தோற்றங்களை உணர முடியும். அனைத்துப்பாடத்திட்டங்களின் மூலமும் தத்துவங்களை பெற்றுக்கொள்ள முடிவதுடன் சர்ச்சைக்குரிய வினாக்கள் மற்றும் நெறிமுறைசவால்கள் போன்றவற்றையும் கையாள உதவும்.

### பாடத்திட்டமும் அதன் நோக்கமும்

- மாணவ மாணவியர் சமுதாயத்தில் எவ்வாறு மதம் பன்முகத்தன்மையுடன் விளங்குகின்றது என்பதை உணர்ந்தறிதல்.
- அவர்கள் வெவ்வேறு மத மரபியல்புகளின் ஆக்கக்கூறுகளை தெரிந்து கொள்ளல்.
- அவர்கள் சமுதாயத்தில் சமய மரபுகளின் கருத்துக்களை விளங்கியக்கொள்ளல்..
- அவர்கள் அன்றாட வாழ்க்கையில் பலதரப்பட்ட நம்பிக்கையும், உலககண்ணோட்டமும் வெவ்வேறு கலாச்சாரமும், மதமும் கொண்ட மக்களைப்பற்றியறிதல்.
- அவர்கள் வித்தியாசமான வாழ்க்கைமுறைகளிற்கும் அவற்றின் பெறுமதிகளிற்கும் மதிப்பளித்தல்.
- அன்றாட வாழ்க்கையிலிருந்து தத்துவ ஞானம் சார்ந்த நெறிமுறைகள் பற்றிய வினாக்களை விபரிக்க உதவுதல்.

**ஆரம்பப்பிரிவில் (Primarstufe) முக்கிய நோக்கம்**
மாணவ மாணவியர்க்கு அவர்களின் அன்றாடவாழ்விலும் பாடசாலையிலும் எதிர்கொள்கின்ற பல்வேறு விடயங்களையும் மதங்களின் அமசங்களையும் விளக்குதல். குறிப்பாக சூரிச்மாநில சமூக கலாச்சாரத்தினை செல்வாக்குச்செலுத்தியதும் தற்போதும் வடிவமைப்பதுமான கிறிஸ்தவமத சாராம்சம், மரபுவழி மற்றும் பாரம்பரியம் என்பனவற்றைப்பற்றி மாணவ மாணவியர் கற்கின்றனர்.

சேர்ந்து வாழ்தலை தீர்மானிக்கின்ற நெறிமுறை சவால்கள், மதிப்புகள் மற்றும் தரநிலைகள் பற்றி ஒருவரால் போதுமான பதில் கூறமுடியாத கேள்விகளையும் பிள்ளைகள் சிந்திப்பார்கள்.

**மேற்பிரிவில் (Sekundarschule) முக்கிய நோக்கம்**
மாணவ மாணவியர் மேல்வகுப்பில் உலகளாவிய ரீதியில் பெரிதளவிலுள்ள மதங்கள் பற்றிய அடிப்படை அறிவினை பெற்றுக்கொள்வர்: கிறிஸ்தவம், யூதம், இஸ்லாம், இந்து மற்றும் பௌத்தம். எவ்வாறு மக்கள் தமது சமய கலாச்சார வழக்கங்களுன் பயணிக்கின்றனர் என்பதை அவர்கள் பிரித்தறிவார்கள்.

மதிப்புகள் மற்றும் தரநிலைகளை தெளிவுபடுத்தவும், எடுக்கும் தீர்மானங்களை காரணப்படுத்தவும் அதற்கு பதிலளிக்கவும் இளம்பராயத்திளர் நெறிமுறை சவால்களை புரிந்துகொண்டு கற்கின்றனர்,

**„மதங்கள், கலாச்சாரங்கள், நெறிமுறைகள்“**

உங்கள் பிள்ளைக்கு புதிதாக „சமயங்கள் கலாச்சாரங்கள் நெறிமுறைகள“ என்ற பாடம் கற்பிக்கப்படும். நெறிமுறைகள் பற்றிய வினாக்களை அன்றாட வாழ்க்கையிலிருந்து விளக்க உதவுவதுடன் கலாச்சாரத்தின் ஓர் பகுதியாகிய பலவகையான மதங்கள் பற்றிய தகவல்களையும் அது தெரியப்படுத்துகின்றது. இன்றைய உலகைப்புரிந்துகொள்வதற்கும் பொதுஅறிவை வளர்பதர்க்கும் இது ஊக்குவிப்பாக அமையும்.

இப்பாடம் பெற்றோரினதும் பிள்ளைகளினதும் கட்டமைப்பு மற்றும் உலககண்ணோட்டம் என்பவற்றிற்கு மதிப்பளிக்கும். பிள்ளைகளின் சமயவழக்கங்கள் பெற்றோரினது பொறுப்பாகவே இருக்கும். „மதங்கள், கலாச்சாரங்கள், நெறிமுறைகள்“ என்ற பாடம் கிறிஸ்தவ தேவால-யத்திலோ அல்லது வேறு சமய மன்றங்களிலோ நடைபெறும் வகுப்புகளிற்கு பதிலீடாகாது

பாடசாலையில் மத செயற்பாடுகள் அனுமதிக்கப்பட மாட்டாது. உதாரணமாக கற்றலில் வழிபாடு நடைபெறமாட்டாது. மாறாக மாணவ மாணவியர் பல்வேறு சமய கலாச்சாரங்களில் வழிபாடு எவ்வாறு எப்படி நிகழ்கின்றது என்பதை கற்பர்.

„மதங்கள், கலாச்சாரங்கள், நெறிமுறைகள்“ என்ற பாடம் மாணவ மாணவியர் இன மத வேறுபாடின்றி அதில் பங்கேற்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. யாப்புமுறை நம்பிக்கையும் மனச்சாட்சியும் பாதுகாக்கப்படும்.

**„சமயங்கள் கலாச்சாரங்கள் நெறிமுறைகள்“ என்ற பாடம் ஒரு கட்டாய பாடமாகும் மற்றும் அது பின்வருமாறு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது:**

→ 1-6 ஆம் வகுப்பு ஆரம்பப்பிரிவு: கிழமையில் ஒரு வகுப்பு
→ 1 ஆம் வகுப்பு மேற்பிரிவு கிழமையில் இரண்டு வகுப்புக்கள்
→ 2 ஆம் வகுப்பு மேற்பிரிவு: கிழமையில் ஒரு வகுப்பு

உங்களிற்கு கேள்விகள் இருப்பின் தயவுசெய்து உங்கள் பிள்ளையினது வகுப்பாசிரியரிடம் தொடர்புகொள்ளுங்கள். மதங்கள், கலாச்சாரங்கள், நெறிமுறைகள் பாடத்திற்குரிய மேலதிக தகவல்களையும் சூரிச் பாடத்திட்டம் 21 (Lehrplan 21) பாடத்திட்டத்தையும் Volksschulamt இனது இணையத்தளத்தில் காணலாம்.

www.zh.ch/vs-schulinfo -> Unterricht -> Fachbereiche & Module